Reformed Series.



தமிழ் வாசகம்

பால சிக்ஷை II



எஸ். எக்ஞஸ்வாமி.



V... ...ARAMAN & CO., KUMBAKONAM

REFORMED SERIES

தமிழ் வாசகம்

பால சிக்ஷை பாகம் 2

TAMIL READERS

PRIMER PART II

BY
S. YAGNASWAMI

(துரைத்தனத்தார் அங்கீகாரம் செய்தது)

V. S. வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் :: கும்பகோணம்

 1930 [அணா 2





முகவுரை

நண்பர்களில் பலர் (Reformed Series) பால சிக்ஷைக்கு அனுபந்தமாக அப்பியாசங்களடங்கிய மற்றொரு புஸ்தகம் தேவை என்று அபிப்பிராயப்பட்டதின் பொருட்டு அதன் இரண்டாம் பாகமாக இதை எழுதலானேன்.

இதில் குழந்தைகளின் மனோபாவத்திற்கேற்ற (Psychology) பாலசிக்ஷண முறையை (Kindergarten method) அனுசரித்து அவர்களுக்கு உற்சாகம் குன்றாமல் பாஷா ஞானம் விஷயஞானம் இவைகள் உண்டாகும்படி அப்பியாஸங்கள் தொடர்ச்சியாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இதன் முதல் பாகத்தை ஆதரித்த நண்பர்கள் இதையும் அவ்வாறே ஆதரிப்பார்களென்று நம்புகிறேன்.





பூ ஈ கை

பை	மை	வை	தை
தா	போ	வா	நீ


கை வை நீ வா பூ தா


அடை	ஈர்	எலி	ஒதி
ஆடு	உளி	ஏணி	ஓலை
இலை	ஊசி	ஐயா	ஔவை

க் ங் ச் ஞ் ட் ண் த்

ந் ப் ம் ய் ர் ல் வ்

ழ் ள் ற் ன்





க் +	அ =	க	கண்	ச் +	அ =	ச	சடை
க்	ஆ	கா	கால்	ச்	ஆ	சா	சாவி
க்	இ	கி	கிளி	ச்	இ	சி	சிலை
க்	ஈ	கீ	கீரி	ச்	ஈ	சீ	சீனி
க்	உ	கு	குடை	ச்	உ	சு	சுரை
க்	ஊ	கூ	கூடு	ச்	ஊ	சூ	சூளை
க்	எ	கெ	கெதி	ச்	எ	செ	செடி
க்	ஏ	கே	கேலி	ச்	ஏ	சே	சேலை
க்	ஐ	கை	கைதி	ச்	ஐ	சை	சைலி
க்	ஒ	கொ	கொடி	ச்	ஒ	சொ	சொரி
க்	ஓ	கோ	கோணி	ச்	ஓ	சோ	சோழி
க்	ஔ	கௌ	கௌரி	ச்	ஔ	சௌ	சௌரி

சோறு சமை	பசு மாடு	சுடு சோறு
பால் கற	கூலி வேலை	இள நீர்
கடை வீதி	நூல் வலை	நேர் வழி
மேழி பிடி	மைல் கல்	சிறு கீரை
மணி அடி	ஊசி முனை	பெரு மழை

தலை	மான்	திரி	பொறி	தூசி
நடை	மூடு	நீலி	மீதி	தோசை
படை	மூடி	நெய்	மேடை	தோணி
மடி	மைல்	பாய்	உமி	புலி
வடை	எலி	பேசு	ஒலி	நூல்
அடி	தடி	போர்	துறை	பூனை
அது	பல்	மிதி	தேடு	வீசை
அணை	நெல்	மேசை	கோடி	மைனா
ஆடை	மலை	இடை	பானை	ஊமை
இசை	மாலை	ஓடி	பிணி	ஓடை
தனி	நிலை	தீனி	பேன்	தெரு
நாடு	முனை	தேன்	மீன்	தோகை
நெடி	மெய்	நேர்	மேல்	நோய்
பணி	மௌனி	பாடு	உடை	நுரை
மணி	எடு	பிடி	ஓது	பூமி

சுமை எடு	ஏர் உழு	ஊர் ஓசை
சோறு போடு	கூலி கொடு	பூனை வால்
ஆடை உடு	மெய் பேசு	சுறா மீன்
ஆணி அடி	மேடை ஏறு	கறி காய்
உடை தரி	காலை வேளை	வாழை இலை







அம்மா	ஈயம்	எவன்	ஒட்டை
ஆரம்	உடல்	ஏவல்	ஓடம்
இவன்	ஊதல்	ஐந்து	ஔதாரி

கந்தை	கெண்டி	சங்கு	செண்டு
காந்தி	கேசம்	சாதம்	சேவல்
கிட்டி	கைவாள்	சிவன்	சைவம்
கீறல்	கொம்பு	சீவல்	சொட்டை
குடம்	கோணம்	சுக்கு	சோளம்
கூடம்	கௌதாரி	சூடம்	சௌளம்

புதன் சந்தை	செண்டு கட்டு
வெள்ளி நோன்பு	முகம் கழுவு
மாட்டு வண்டி	வாசல் மெழுகு
பச்சை நிறம்	கோலம் எழுது
பஞ்சு மெத்தை	மூட்டை கட்டு
முயல் குட்டி	முத்து வாங்கு

தடம்	நகர்	வேட்டை	தொப்பி
தங்கை	நொண்டி	மல்லி	தோப்பு
தானம்	பச்சை	மீனம்	நிறம்
நலம்	பெட்டி	வானம்	நாமம்
பந்து	மகள்	வேம்பு	பிச்சை
பறவை	மாதம்	துளசி	புள்ளி
மகன்	பூச்சி	துவரை	பொந்து
மிதிலை	வாசம்	தூபம்	மாதம்
மொட்டு	வேடன்	பானம்	விரல்
வனம்	தீரம்	பிஞ்சு	நிலம்
வெள்ளி	துண்டு	பேரன்	நேமம்
மயில்	தெற்கு	மட்டை	புத்து
தாவளி	நயம்	முகம்	பூசாரி
திக்கு	நோம்பு	மெத்தை	மேற்கு
தீபம்	பாடம்	வைரம்	வீரன்

மிதிலை நகர்
மேற்கு திக்கு
குதிரை வண்டி
துண்டு வேஷ்டி
தென்னை மட்டை
துளசி தளம்




தீபம் ஏற்று
மட்டை பின்னு
வாசம் பண்ணு
மேளம் கொட்டு
மெத்தை கட்டு
குப்பை கூட்டு


நேர் வழி நட
பணி விடை செய்
பூமி மேல் இரு
சனி நீர் ஆடு
பாய் மேல் படு
நூல் திரி திரி



தேன் பாகு எடு
நீர் மோர் குடி
படி பால் கற
உலை வாய் மூடு
ஊர் வழி நில்
ஆல் இலை பறி



வெள்ளி வாசல் மெழுகு
பச்சை நிறம் அழகு
புதன் சந்தை கூடும்
மாட்டு வண்டி ஓட்டு
கூடம் அதிக நீளம்
நல்ல பாம்பு விஷம்
சேலம் பெரிய டவுன்
காப்பு பத்து பவுன்
தீபம் ஒன்று ஏற்று
கிணறு வெட்ட ஊறும்
தப்பால் இன்று வாங்கு
நல்ல செய்தி எழுது


  

ல்ல	த்த	க்க	ச்ச
ற்ற	ப்ப	ய்ய	ம்ம

முல்லே	வாத்து	கொக்கு
நெல்லி	கத்தை	பக்கம்
மல்லிகை	சத்தம்	மக்கள்
வெல்லம்	பித்தம்	சக்கரம்

மச்சு	நெற்றி	உப்பு
குச்சு	குற்றம்	தப்பு
எச்சம்	ஏற்றம்	புளிப்பு
மச்சம்	முற்றம்	ஒப்பம்

பொய்யன்	மெய்யன்	நொய்யல்
திம்மன்	அம்மன்	அம்மி


ண்ண	ன்ன	ந்ந
ட்ட	வ்வ	ள்ள

பட்டம்	பின்னல்	பிள்ளை
சட்டம்	மின்னல்	வெள்ளி
தட்டி	தென்னை	சுள்ளி
கட்டடம்	அன்னம்	பள்ளம்

வெந்நீர்	கவ்வு	வண்ணான்
சந்நிதி	செவ்வாய்	திண்ணை
செந்நாய்	செவ்வந்தி	கிண்ணம்
சந்நியாசி	கொவ்வைப்பழம்	கண்ணன்







ஞ்ச	ன்ற	ண்ட
ங்க	ந்த	ம்ப

சங்கரன்	கன்று	கண்டம்
பெங்களூர்	இன்று	சுண்டல்
மங்களம்	ஒன்று	பண்டம்
தேங்காய்	தின்றான்	மண்டபம்
பொங்கல்	மூன்று	சண்டை

குஞ்சு	பந்தயம்	கம்பன்
மஞ்சள்	தந்தை	கொம்பு
தஞ்சாவூர்	இலந்தை	சாம்பன்
பஞ்சம்	பந்தம்	பம்பரம்
பஞ்சு	மந்தை	வேம்பன்








அப்பம் ஈர்க்கு எச்சம் ஒருவர்
ஆத்தாள் உலக்கை ஏற்றம் ஓட்டம்
இராமன் ஊஞ்சல் ஐயனார் ஔடதம்

கிழக்கு மோதிரம் நாற்பது எழுபது
வடக்கு இருபது ஐம்பது எண்பது
நகரம் முப்பது அறுபது தொண்ணூறு

அயோத்தி உடையாளூர் ஐயனார்புரம்
ஆதனூர் ஊத்துக்காடு ஒரத்தூர்
இராமேசுவரம் எலமனூர் ஓடாச்சேரி
ஈச்சங்குடி ஏத்தாப்பூர் ஔரங்கபாத்

அரங்கன் இராகவன் சுப்ரமண்யன்
ஆறுமுகம் அருச்சுனன் இரகுநாதன்
கேசவன் கிருஷ்ணன் பலராமன்
ஏகாம்பரம் நாராயணன் ஸ்ரீனிவாசன்

ஸ்	ஷ்	ஜ்	க்ஷ்	ஹ்
ஸ	ஷ	ஜ	க்ஷ	ஹ
ஸா	ஷா	ஜா	க்ஷா	ஹா
ஸி	ஷி	ஜி	க்ஷி	ஹி
ஸீ	ஷீ	ஜீ	க்ஷீ	ஹீ
ஸு	ஷு	ஜு	க்ஷு	ஹு
ஸூ	ஷூ	ஜூ	க்ஷூ	ஹூ
ஸெ	ஷெ	ஜெ	க்ஷெ	ஹெ
ஸே	ஷே	ஜே	க்ஷே	ஹே
ஸை	ஷை	ஜை	க்ஷை	ஹை
ஸொ	ஷொ	ஜொ	க்ஷொ	ஹொ
ஸோ	ஷோ	ஜோ	க்ஷோ	ஹோ
ஸௌ	ஷௌ	ஜௌ	க்ஷௌ	ஹௌ



ஸ்திரீ	புருஷன்	பங்கஜம்
வஸ்திரம்	சந்தோஷம்	ஜமீன்தார்
புஸ்தகம்	புஷ்பம்	ஜானகி
ஸர்ப்பம்	விஷம்	வஜ்ரம்
வாஸனை	சிஷ்யன்	ஜீவனம்
சாஸனம்	துஷ்டன்	ஜாமீன்
ஸூர்யன்	கிருஷிகன்	ஜன்மம்

பக்ஷணம்	வாஹனம்	ஸ்ரீரங்கம்
க்ஷேமம்	ஹிமயமலை	ஸ்ரீதரன்
அக்ஷயம்	ஸிம்ஹம்	.ஸ்ரீபதி
க்ஷேத்திரம்	ஹாஸ்யம்	ஸ்ரீகண்டன்

மோக்ஷம்	மோஹம்	ராஜராஜஸ்ரீ
தக்ஷிணை	பலஹீனம்	ஸ்ரீமான்
விருக்ஷம்	ஹம்சம்	ஸ்ரீரவணம்

காலையில் எழுந்திரு



கடவுளை வணங்கு

கைகால் அலம்பு



பல் விளக்கு

முகம் கழுவு



தேய்த்து முழுகு

துணியைத் துவை

மென்று தின்னு



பள்ளிக்குப் போ



பாடத்தைப் படி

மாலையில் விளையாடு

இரவில் தூங்கு



படத்தில் ஒரு நாய் பார்!
அது மாமிசம் தின்னும்
அதன் உடல் நீளம்
அதன் வால் வளைவு




இது ஒரு பசு மாடு
பசு மாடு புல் தின்னும்
அது பால் தரும்
பால் இனிப்பாய் இருக்கும்



இதோ பார்! பச்சைக்கிளி
அது பழம் தின்னும்
அதை நன்ருய்ப் பழக்கலாம்
அது இனிமையாய்ப் பேசும்



இது ஒரு பாய்
இது கோரைப்பாய்
இது படுக்க உதவும்
இதன் விலை நயம்
இது மிருதுவாய் இருச்கும்



இதோ பார்! காகம்
காகம் கூட்டமாய் வசிக்கும்
அது சுத்தமான பக்ஷி
காக்கை வேப்பம்பழம் தின்னும்
அது காலையில் எழுந்திருக்கும்



பெரியது	உயரம்	மெலிது
சிறியது	குட்டை	பருமன்
அகலம்	வளைவு	மேடு
குறுகல்	நேர்	பள்ளம்



யானை மிகப் பெரிய மிருகம்.
பூனை மிகச் சிறிய மிருகம்.

குதிரை உயரமாய் இருக்கும்.
பன்றி குட்டையாய் இருக்கும்.

நூல் திரி மிக மெலிது.
தேர் வடம் அதிகப் பருமன்.

இராஜ வீதி வெகு அகலம்.
சந்து வெகு குறுகல்.

பாம்பு வளைந்து செல்லும்.
இரயில் வண்டி நேராய்ச் செல்லும்.

குளக்கரை வெகு மேடு.
நெல் வயல் வெகு பள்ளம்.



மாங்கொட்டை	கருப்பஞ்சாறு	ஆற்றங்கரை
செந்தாமரை	பனம் பழம்	நெடுந்தூரம்
வேப்பங்கொழுந்து	கருங்குரங்கு	பசும்புல்
கருந்துளசி	செம்பருத்தி	பூஞ்செடி

மாங்கொட்டை முளைத்து செடியாகும்.
செந்தாமரை ஜலத்தில் வளரும்.
வேப்பங் கொழுந்து மருந்துக்கு உதவும்.
கருந்துளசி அதிக காரம்.
கருப்பஞ்சாறு வெகு இனிப்பு.
கடல் நீர் உவர்ப்பாக இருக்கும்.
கருங்குரங்கு காட்டில் வசிக்கும்.
செம்பருத்தி பார்வைக்கு அழகு.
ஆற்றங்கரை வெகு மேடு.
நெடுந்தூரம் நடந்தால் கால் நோகும்.
பசும்புல் மாட்டிற்கு நல்ல தீனி.
பூஞ்செடி புஷ்பம் கொடுக்கும்.



லட்டு இனிய பண்டம்.

அதன் வடிவம் உருண்டை.




வடை நல்ல தின்பண்டம்.

அதன் வடிவம் வட்டம்.

கத்திரிக்காய் சமைக்க உதவும்.

அதன் வடிவம் நீண்ட வட்டம்.




புஸ்தகம் படிக்க உதவும்.

அதன் வடிவம் சதுரம்.

பந்தின் வடிவம் என்ன ?

அதன் வடிவம் உருண்டை.



செங்கல் என்ன வடிவம் ?

அதன் வடிவம் சதுரம்.



முட்டையின் வடிவம் என்ன ?

அதன் வடிவம் நீண்ட வட்டம்.


இதற்கு முட்டை வடிம் என்று பெயர்.



தோசையின் வடிவம் என்ன ?

அதன் வடிவம் வட்டம்.





க்க   த்த   ப்ப   ர்ச

வெள்ளிக்கெண்டி விலை அதிகம்
கோழிக்குஞ்சு இரைதேடும்
கன்றுக்குட்டி துள்ளிஓடும்

வெள்ளித்தாலம் வெகு அழகு
நாட்டுத்துணி வாங்கிக் கட்டு
பலாத்தோப்பு நிழல் தரும்

பித்தளைப்பூட்டு அதிக கனம்
மூட்டைப்பூச்சி வீட்டில் உண்டு
சாந்துப்பொட்டு ஸ்திரீகளுக்கு அழகு

பட்டுச்சேலை வெகு பகட்டு
நாட்டுச்சீட்டி விலை சரசம்
சீமைச் சுண்ணும்பு எழுத உதவும்

கற்கண்டு தித்திக்கும்	தித்திப்பு
வேம்பு கசக்கும்	கசப்பு
புளி புளிக்கும்	புளிப்பு
வாழைப்பூ துவர்க்கும்	துவர்ப்பு
மிளகாய் உறைக்கும்	உறைப்பு
உப்பு கரிக்கும்	கரிப்பு

பாயஸம் அதிக தித்திப்பு.

எலுமிச்சம் பழத்தின் சுவை என்ன ?

அதன் சுவை புளிப்பு.

பாகற்காய்க்குக் கசப்பு உடன் பிறப்பு.

புளியை இட்டுக் கசப்பை மாற்று.

உப்பைப் போட்டு உறைப்பை நீக்கு.

பாலுக்குச் சர்க்கரை தோழன்.

உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.

உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

கொக்கு வெண்மை நிறம்	-	வெண்மை
எருமை கருப்பு நிறம்	-	கருமை
பயிர் பச்சை நிறம்	-	பசுமை
குன்றுமணி சிவப்பு நிறம்	-	சிவப்பு
பொன் மஞ்சள் நிறம்	-	மஞ்சள்

பால் வெள்ளை வெளேரென்று இருக்கும்.
இரத்தம் செக்கச் செவேலென்று இருக்கும்.
காகம் கன்னங் கரேலென்று இருக்கும்.
இலை பச்சைப் பசேலென்று இருக்கும்.
மின்னல் பளிச்சுப் பளிச்சென்று வீசும்.

குடையின் நிறம் என்ன?
அதன் நிறம் கறுப்பு.
எலுமிச்சம் பழத்தின் நிறம் என்ன?
அதன் நிறம் மஞ்சள்.
பாகற்காயின் நிறம் என்ன?
அதன் நிறம் பச்சை.

ஸாகா, ஸாகா கமககரீ

பாபா, மகரீ, பமகரிஸா


ஒன்று	உலகில்	கடவுள் ஒன்று
இரண்டு	இகத்தில்	ஜாதி இரண்டு
மூன்று	முத்தொழில்	மூர்த்தி மூன்று
நான்கு	நலமிக்க	வேதம் நான்கு
ஐந்து	அறியும்	புலன் ஐந்து
ஆறு	அரிய	நூல் ஆறு
ஏழு	எழும்பிய	கார் ஏழு
எட்டு	ஏற்றிய	திக்கு எட்டு
ஒன்பது	ஓங்கிய	கிரகம் ஒன்பது
பத்து	பரமனின்	ஜன்மம் பத்து

1 2 3 4 5 6 7 8 9

10 20 30 40 50 60 70 80 90

100

சூரியன் சந்திரன்



ஞாயிறு திங்கள்

ஞாயிற்றுக் கிழமை — ஞாயிறு
திங்கள் கிழமை — திங்கள்
செவ்வாய்க் கிழமை — செவ்வாய்
புதன் கிழமை — புதன்
வியாழக் கிழமை — வியாழன்
வெள்ளிக் கிழமை — வெள்ளி
சனிக் கிழமை — சனி

சூரியன் பிரகாசிக்கிற காலம் பகல்.
சூரியன் மறைந்திருக்கிற காலம் இரவு.
பகலும் இரவும் சேர்ந்து ஒரு நாள்.
ஏழுநாள் ஒரு வாரம்.
ஞாயிறு வாரத்தின் முதல் நாள்.
சனி வாரத்தின் கடைசி நாள்.
இன்று வெள்ளிக் கிழமை.
நேற்று என்ன கிழமை ?
நேற்று வியாழக்கிழமை.
நாளைக்கு என்ன கிழமை ?
நாளைக்குச் சனிக்கிழமை.

அமாவாசை	அஷ்டமி
பிரதமை -	நவமி
துதியை -	தசமி
திருதியை -	ஏகாதசி
சதுர்த்தி -	துவாதசி
பஞ்சமி -	திரயோதசி
சஷ்டி -	சதுர்தசி
சப்தமி -	பௌர்ணமி

பதினைந்து நாட்கள் ஒரு பக்ஷம் அல்லது பிறை.
இரண்டு பக்ஷங்கள் ஒரு மாதம்.
ஒரு பக்ஷம் சந்திரன் வளர்ந்து கொண்டே வரும்.
அதற்கு சுக்கில பக்ஷம் என்று பெயர்.
அதற்கு வளர்பிறை என்றும் பெயர் உண்டு.
மற்றொருபக்ஷம் அது குறைந்துகொண்டேவரும்.
அதற்கு கிருஷ்ண பக்ஷம் என்று பெயர்.
அதற்குத் தேய்பிறை என்றும் பெயர் உண்டு.
வளர் பிறையின் கடைசி நாள் பௌர்ணமை.
அன்று இரவு முழுச் சந்திரனைக் காணலாம்.
தேய் பிறையின் கடைசி நாள் அமாவாசை.
அன்று இரவு இருட்டாயிருக்கும்.


சித்திரை-மேஷம்


வைகாசி-ரிஷபம்


ஆனி-மிதுனம்


ஆடி-கடகம்


ஆவணி-சிம்மம்


புரட்டாசி-கன்னி


ஐப்பசி-துலாம்


கார்த்திகை-விருச்சிகம்


மார்கழி-தனுசு


தை-மகரம்


மாசி-கும்பம்


பங்குனி-மீனம்


சித்திரை வருஷத்தின் முதல் மாதம்.
பங்குனி வருஷத்தின் கடைசி மாதம்.
சித்திரைமீ 1உ தமிழ் வருஷப் பிறப்பு.
பன்னிரண்டு மாதங்கள் ஒரு வருஷம்.

ஒரு மாதத்திற்கு நாலு வாரங்கள்.
ஐம்பத்திரண்டு வாரங்கள் ஒரு வருஷம்.

சித்திரா பௌர்ணமி	ஐப்பசி தீபாவளி
வைகாசி விசாகம்	கார்த்திகை தீபம்
ஆனித் திருமஞ்சனம்	மார்கழி திருவாதிரை
ஆடிப் பூரம்	தைப் பொங்கல்
ஆவணி அவிட்டம்	மாசி மகம்
புரட்டாசி நோன்பு	பங்குனி உத்திரம்

அசுவதி	மகம்	மூலம்
பரணி	பூரம்	பூராடம்
கார்த்திகை	உத்திரம்	உத்திராடம்
ரோகிணி	அஸ்தம்	திருவோணம்
மிருகசீரிஷம்	சித்திரை	அவிட்டம்
திருவாதிரை	சுவாதி	சதயம்
புனர்பூசம்	விசாகம்	பூரட்டாதி
பூசம்	அனுஷம்	உத்திரட்டாதி
ஆயில்யம்	கேட்டை	ரேவதி


ஆடி பிறந்தால் அதிகக் காற்று
ஐப்பசி பிறந்தால் அடை மழை
கார்த்திகை பிறந்தால் கால் கோடை
மார்கழி பிறந்தால் மிகக் குளிர்
பங்குனி பிறந்தால் கோடை



படத்தில் இருப்பது ஒரு செடி.
அதில் கிளைகளும், இலைகளும் உண்டு.

செடியின் அடிபாகம் வேர்.
வேர் செடியைத் தாங்கும்

செடியின் நடுவில் இருப்பது தண்டு.
தண்டு கிளைகளைத் தாங்குகிறது.
கிளைகளில்தான் இலைகள் இருக்கின்றன.
முற்றின இலை பழுப்பு நிறம்.
பழுத்த இலை கீழே விழும்.



செடி புஷ்பம் கொடுக்கும்.
புஷ்பம் வாசனை வீசும்.
பூவில் பிஞ்சு உண்டாகும்.
பிஞ்சு முற்றிக் காய் ஆகி, பழம் பழுக்கும்.
பழத்தில் விதை உண்டு
விதை முளைத்துச் செடியாகும்.
பெரிய செடிக்கு மரம் என்று பெயர்.
மரம் நிழல் தரும்.
பல மரங்கள் வளர்ந்துள்ள இடம் தோப்பு.

ஆதனூர் என்பது ஒரு சிறிய கிராமம்.




அதில் நந்தனுர் பிறந்தார்.

அவருக்குச் சிறு வயதிலேயே தெய்வ பக்தி உண்டு.

நந்தனுருக்குச் சிநேகிதர்கள் பலர்.

அவர்கள் எல்லோரும் பஜனை செய்வார்கள்.



மார்கழிமீ திருவாதிரை உத்ஸவம் நடந்தது.

அந்தத்திருநாள் சிதம்பரத்தில் நன்ருயிருக்கும்.

அதற்கு நந்தனுர் அங்கே போனுர்.

சிநேகிதர்களும் கூடவே சென்ருர்கள்.

அவர் கடவுளை கும்பிட்டார்.

கடவுள் அவருக்குத் தர்சனம் கொடுத்தார்.

ஜனங்கள் நந்தனுரைக் கொண்டாடுகிருர்கள்.

நந்தனுர் ஒரு சிறந்த பக்தர்.

படத்தில் இருப்பவர் எட்வெர்ட் இளவரசர்.



இவரை வேல்ஸ் இளவரசர் என்பார்கள்.

இவர் நமது ஜார்ஜ் இராஜாவின் மூத்த பிள்ளை.

இவர் வெகு சமர்த்தர்.

இவர் குழந்தையிலேயே எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டார்.

இவருக்கு விளையாட்டிலேயும் அதிகப் பழக்கம் உண்டு.

இவர் ஏழைகளிடத்தில் அதிக அன்புள்ளவர்.

இளவரசர் பல தேசங்களுக்குப் போயிருக்கிறார்.

இவர் நமது சென்னைக்கு 1922ஸ்ரீ ஜனவரிமீ 13உ விஜயம் செய்தார்.

இவரே நமது ஜார்ஜ் இராஜாவுக்குப் பிறகு நமக்கு இராஜா ஆவார்.

நீங்கள் இராஜாவிடத்தில் விசுவாசமாய் இருங்கள்.

அது நமது முக்கிய கடமை.

பா ஸரிகா ரீஸரீஸ நீ பாதாரிஸா
மாம, மாம மாக பாம, காஸ ரீ மகா

ஒன்றுடனே ஒன்று சேர்க்க
ஒருங்கே இரண்டாகும். $1+1=2$

இரண்டுடனே ஒன்று சேர்க்க
இணையில் மூன்றாகும். $2+1=3$

மூன்றுடனே ஒன்று சேர்க்க
முறையாய் நான்காகும். $3+1=4$

நான்குடனே ஒன்று சேர்க்க
நலமாய் ஐந்தாகும். $4+1=5$

ஐந்துடனே ஒன்று சேர்க்க
அழகாய் ஆறாகும். $5+1=6$

ஆறுடனே ஒன்று சேர்க்க
அடுக்காய் ஏழாகும். $6+1=7$

ஏழுடனே ஒன்று சேர்க்க
எண்ணம் எட்டாகும். $7+1=8$

எட்டுடனே ஒன்று சேர்க்க
இனிமை ஒன்பதாகும். $8+1=9$

ஒன்பதுடன் ஒன்று சேர்க்க
பண்பாய் பத்தாகும். $9+1=10$

என்பதறிந் தென்றுங் கூட்ட
எண்ணின் கணிதமாம்.

பத்திலிருந்து ஒன்று நீக்க
பரிவாய் ஒன்பதே $10-1=9$

ஒன்பதிலிருந்து ஒன்று நீக்க
உரிமை எட்டாகும். $9-1=8$

எட்டிலிருந்து ஒன்று நீக்க
எதிரில் ஏழாகும். 8—1=7

ஏழிலிருந்து ஒன்று நீக்க
இணையில் ஆறுகும். 7—1=6

ஆறிலிருந்து ஒன்று நீக்க
அன்பாய் ஐந்தாகும் 6—1=5

ஐந்திலிருந்து ஒன்று நீக்க
அறிவாய் நான்காகும் 5—1=4

நான்கிலிருந்து ஒன்று நீக்க
நலமாய் மூன்றாகும். 4—1=3

மூன்றிலிருந்து ஒன்று நீக்க
முன்னே இரண்டாகும் 3—1=2

இரண்டிலிருந்து ஒன்று நீக்க
இனிமை ஒன்றாகும். 2—1=1

ஒன்றிலிருந்து ஒன்று நீக்க
ஒன்று மில்லை காண். 1—1=0

ஒன்றும் ஒன்றும் இரண்டு
உண்மை நன்மை கண்டு 1+1=2

இரண்டும் இரண்டும் நான்கு
இரந்தும் ஈகை பாங்கு 2+2=4

மூன்றும் மூன்றும் ஆறு
முன்னோர் சொல்லைக் கூறு 3+3=6

நான்கும் நான்கும் எட்டு
நாட்டில் கலகம் மட்டு 4+4=8

ஐந்தும் ஐந்தும் பத்து
அணியில் அழகு முத்து. 5+5=10

Printed at The Royal Pring Works, Mount Road, Madras.

இங்கிலீஷ் மாதங்கள்—12

ஜனவரி	மே	செப்டம்பர்
பிப்ரவரி	ஜூன்	அக்டோபர்
மார்ச்	ஜூலை	நவம்பர்
ஏப்ரல்	ஆகஸ்டு	டிசம்பர்

தமிழ் வருஷங்கள்—60

பிரபவ	ஸர்வஜித்து	பிலவங்க
விபவ	ஸர்வதாரி	கீலக
சுக்ல	விரோதி	ஸௌம்ய
பிரமோதூத	விக்ருதி	ஸாதாரண
பிரஜோத்பத்தி	கர	விரோதிகிருது
ஆங்கிரஸ	நந்தன	பரீதாபி
ஸ்ரீமுக	விஜய	பிரமாதீச
பவ	ஜய	ஆனந்த
யுவ	மன்மத	ராக்ஷஸ
தாது	துன்முகி	நள
ஈஸ்வர	ஹேவிளம்பி	பிங்கள
பஹுதான்ய	விளம்பி	காளயுக்தி
பிரமாதி	விகாரி	ஸித்தார்த்தி
விக்கிரம	சார்வரி	ரௌத்திரி
விஷு	பிலவ	துன்மதி
சித்திரபானு	சுபகிருது	துந்துபி
சுவபானு	சோபகிருது	ருத்ரோத்காரி
தாரண	குரோதி	ரக்தாக்ஷி
பார்த்திப	விசுவாவஸு	குரோதன
விய	பராபவ	அக்ஷய

பள்ளிக்கூடங்களில் உபயோகப்படுத்தக் கூடிய தமிழ்ப் புஸ்தகங்கள்

1.	லலிதா அல்லது பொறுத்தார் பூமியாள்வார்	அணா	4
2.	மூன்று சகோதரர்கள் அல்லது உழைப்பின் சிறப்பு	,,	4
3.	ஷராப்கான் அல்லது குடியினால் வருங்கேடு	,,	3
4.	கதாவாசகம் (ஷை மூன்றும் சேர்ந்தவை)	,,	10
5.	தென்னிந்திய நீதிக் கதைகள்	,,	2
6.	ஹரிச்சந்திரன்	,,	12
7.	இளைஞருக்குரிய நல்வழிப்பாக்கள்	,,	1
8.	இளைஞருக்குரிய சுகவழிப்பாக்கள்	,,	1½
9.	பட்டினத்துப் பிள்ளையார் சரித்திரம்—வரகவி திரு. A. சுப்ரமண்ய பாரதியார்	,,	7
10.	வித்தியாமுறை கைப்பழக்கம் (கை கண் பயிற்சி)	,,	2½
11.	கிராமப் பஞ்சாயத்து	,,	4
12.	பாலர் சுகநூல்	,,	4
13.	சோழ நாட்டுச் சரித்திரக் கதைகள்	,,	4

பால நீதிமஞ்சரி

வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதி எழுதியது

மலர் : 1—உலகநீதிக் கதைகள் 2-ம் வகுப்புக்கு	அணா	2½
மலர் : 2—ஆத்திசூடிக் கதைகள் 3-ம் வகுப்புக்கு	,,	3
மலர் : 3—கொன்றைவேந்தன் கதைகள் 4-ம் வகுப்புக்கு	,,	4
மலர் : 4—வெற்றிவேற்கை 5-ம் வகுப்புக்கு	,,	5

நூதன முறைக் கணிதம்

K. S. சுப்ரமண்யம் இயற்றியவை

1, 2-வது வகுப்புகளுக்கு	அணா	5	4 வது வகுப்புக்கு	அணா	6
3-வது வகுப்புக்கு	,,	5	5-வது ,,	,,	9

பாபா எண்சுவடி வாய்பாடு அணா 1

Printed at the Royal Printing Works, Mount Road, Madras.